# இணையமும் தமிழ்ப் பயன்பாடும்

அலகு-4

# இணையத்தின் பயன்பாடு

- தேடுபொறிகள் , மின்னஞ்சல் ,இணைய தளங்கள், வலைப்பூக்கள் ,சமூக இணையதளங்கள், படக்காட்சிகள், மின் ஆளுகை, மின்வணிகம் ,இணைய ஊடகங்கள் ,மின் தரவுத்தளங்கள், இணையக் கல்விக் கூடங்கள் என்றவாறு இணையம் பல்வேறு நிலைகளில் அன்றாட வாழ்வில் கலந்துவிட்டது.

# இணையத் தொழில் நுட்பத்தின் சில அடிப்படைகள்

- இணையதள முகவரிகள் – Website Addresses
- தரவிறக்கமும் தரவேற்றமும்-Download&Upload
- இற்றைப்படுத்தல் & திறமுயர்த்தல்-Update & Upgrade

# உலாவி-Browser

GoogleChrome,Mozilla Firefox, Safari, Opera, Internet Explorer, Epic போன்ற மென்பொருள்கள் கிடைக்கின்றன. இவற்றின் வழியாக நாம் இணையத்தோடு தொடர்பு கொள்ள முடியும்.

**தேடுபொறி-Search Engine**

இணையத்தில் நமக்குத் தேவையானவற்றை தேடித் தரும் செயல்களைச் செய்கின்ற ஒரு மென்பொருள் தேடுபொறி என்பதாகும்.

# மின்னஞ்சல்- e-mail

1. அனுப்ப வேண்டியவரின் மின்னஞ்சல் முகவரி
2. பொருள் – Subject
3. அனுப்ப வேண்டிய செய்தி- Text
4. இணைப்பு- Attachment.

# மின் குழுக்கள் e-groups

மின்னஞ்சல் கணக்கு வைத்திருப்பவர்கள் ஒருவரையொருவர் தொடர்பு கொண்டு செய்திகளை பரிமாறிக்கொள்ளும் நிலையிலிருந்து ஒரே சிந்தனைக் களத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு குழுவாக இணைந்து தங்களுக்குள் செய்திகளை இணையத்தின் வழி பரிமாறிக் கொள்ளும் முறையை மின் குழு என்கிறோம்.

**இணையதளம் - website**

இணையதளம் என்பது ஒரு நிறுவனம் அல்லது தனிமனிதன் தங்களை பற்றியோ தாம் செய்யும் தொழில்,சேவை, பொருள் பற்றியோ இணயத்தின் வழி உலகிற்கு உரை, படம் ,ஒலி, நிகழ்படம் அல்லது காணொளி போன்றவற்றை பரிமாறிக்கொள்ளும் ஒரு தகவல் தொடர்பு கருவியாகும்.

# வலைப்பூ- Blog

நிரல்களை கையாளாமல் செய்திகளை மட்டும் இதன் நிர்வகிக்கும் தன்மை கொண்டதாகவும் இலவசமாக பெற கூடியதாகவும் பயனாளர்களின் எளிமை கருதி தோன்றியது தான் வலைப்பூக்கள் . இணையதளத்தின் வளர்ச்சியாக வலைப்பூ தோன்றியது.

## செய்தியோடை திரட்டி- News feed Pooler

இணையதளத்திலும் வலைப்பூக்களிலும் இடப்படும்

இடுகைகளை திரட்டித் தரும் ஒரு இணையதளம்

செய்திகளை திரட்டி எனப்படும். இதனை வலைதிரட்டி என்றும் அழைப்பார்கள் .

## மின்னூலகம் - e-library

நேரடியாக நூலகத்திற்கு சென்று நூலைப் படிப்பது போன்று இணையதளத்தின் வாயிலாக தரவிரக்கம் செய்து படிப்பதற்கு வழிவகை செய்வது மின் நூலகம்

## இணையநூல் அங்காடி

பெரும்பான்மையான நூல்களை அதன் அட்டைப் படம், உள்ளடக்க அறிமுகம், விலை ,ஆசிரியர் போன்ற விபரங்களை வழங்கி இணையவழி ஆக அச்சடிக்கப்பட்ட நூல்களை விற்பனை செய்யும் இணையதளம்

# மின் நூல்-e-book

- கையாவாண நூல்-pdf book
- மீயுரைநூல் –HTML book
- புரட்டும் நூல் – flip book
- மென்நூல்  - epub book
- கிண்ணூல் – mobi book
- மின்னூல் உருவாக்கம் –e-book creation
- மின்னூல் கிடங்கு-e-book store.

# ஒலி நூல்-Audio book

நூல்களை அப்படியே படித்து ஒளி வடிவில் சேமித்து வெய்ப்பது ஒலி நூலாகும் .இதனை Talking Books என்று குறிப்பிடுகிறோம்.

**செயல் விளக்க காணொளி – Demo vedio**

கணினியில் ஏற்படும் சந்தேகங்களுக்கும் சிக்கல்களுக்கும் தீர்வு காண செயல் விளக்க காணொளி பெரிதும் பயன்படுகிறது.

**மின் அகராதி**

அகராதியை எடுத்து அதில் ஒரு குறிப்பிட்ட சொல் எங்கு உள்ளது என்று தேடி கண்டுபிடித்து பொருள் தெரிந்து கொள்வதை எளிமைப்படுத்தும் வகையில் மின் அகராதிகள் உருவாக்கப்பட்டுள்ளன

**மின் செய்தித்தாள்**

நாள் தோறும் வெளிவரும் செய்தித்தாள்களை இணைய வழியாகவே படிக்கின்ற நிலையை உருவாக்கியது மின் செய்தித்தாள்

# இணைய வானொலி –online radio

இணையம் வழியாக ஒலிபரப்பப்படும் வானொலி நிகழ்ச்சிகளை இணைய வானொலி என்று அழைக்கின்றோம். வானொலிகளில் நிகழ்ச்சிகளை கேட்பது போன்று இணையதளங்களிலும் கேட்கலாம்.

# மின் அரட்டை e-chat

- முகநூல்-Facebook
- குறும் பதிவு-Twitter
- இசுகை-Skype
- கூகுள்+ -Google+

# மின்னாளுகை e-Governance

தகவல் தொடர்பு நுட்பங்கள் வழியாக அரசும் மக்களும் ஒருவரை ஒருவர் தொடர்பு கொண்டு அவரவர் சேவையை பெற்றுக் கொள்ளும் முறைக்கு மின்னாளுகை என்று பெயர்.

**மின் வணிகம் online Shopping**

வீட்டில் இருந்தபடியே தங்களுக்குத் தேவையான பொருட்களை இணையத்தின் வாயிலாக வாங்குவதற்கு மின்வணிகம் என்று பெயர்.

# விக்கிபீடியா Wikipedia

விக்கிப்பீடியா என்பது இணையத்தில் இயங்குவதும் கூட்டு முயற்சியால் உருவாக்கப்படுவது மான கட்டற்ற பன்மொழி கலைக் களஞ்சியத் திட்டமாகும்

**குழூச்செயலி** – Teamviewer

ஒரு கணினி வழியாக இன்னொரு கணினியை இயக்க உதவும் மென்பொருள்களுக்கு குழூச்செயலி என்று பெயர்.

# பலகைக் கணினி /திறன்பேசி/ செல்பேசி சார்ந்த குறுஞ்செயலிகள்

- குறுஞ்செயலி கிடங்கு Appstore
- குறுஞ்செயலிகள் – Apps

1. பேஸ்புக் /முகநூல் - Facebook
2. ட்விட்டர் /குறும் பதிவு –Twitter
3. கூகுள்+ - Google +
4. ஸ்கைப்/இசுகை- Skype
5. வைபர் /அதிர்வி- Viber
6. வாட்ஸ்அப்/ நிகழ் பதிவு-WhatsApp